தினமணி

**விதைகளை பரிசோதனை செய்து பயிரிட வேண்டும்**

First Published : 13 Sep 2010 02:11:30 PM IST

கரூர், செப். 12: விதைகளை பரிசோதனை செய்து பயிரிட வேண்டும் என விதைப் பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் அ. வெங்கட்ராமன் கேட்டுக் கொண்டுள்ளார்.

கரூர் மாவட்டத்தில் காந்திகிராமம் திண்ணப்பாநகரில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அண்மையில் விதைச் சான்றளிப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் விதைப் பரிசோதனை ஆய்வகம் திறக்கப்பட்டது.

இந்த ஆய்வகத்தின் நன்மைகள், பணிகள் குறித்து விதைப் பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் அ. வெங்கட்ராமன் கூறியது:

இந்த விதைப் பரிசோதனை ஆய்வகம் | 6 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு நெல், காய்கறி, எண்ணைய் வித்துக்கள், பருப்பு வகைகள் உள்ளிட்ட அனைத்து விதைகளின் தரம், முளைப்புத் திறன் குறித்து ஆய்வு நடத்தி விவசாயிகள் இதை பயன்படுத்தலாமா? வேண்டாமா? வென்று சான்றளிப்போம். மேலும், விதை மாதிரிகளில் புறத்தூய்மை, ஈரப்பதத்தை கண்டறியும் கருவிகள் கொண்டு அவற்றையும் விவசாயிகளுக்கு எடுத்துரைப்போம்.

இந்த ஆய்வகத்தில் விதை மாதிரிகளை ஆய்வு செய்ய விரும்பும் விவசாயிகள் தங்களது விதை மாதிரிகளை அனுப்பலாம். விதைக்காக வைக்கப்பட்டுள்ள தானியத்திலிருந்து நெல்லாக இருந்தால் 50 கிராம் மாதிரியாக அனுப்ப வேண்டும்.

ஒவ்வொரு பயிருக்கும் ஒரு அளவு உள்ளது.

அவைகள் விவரம் (கிராம்களில்): கம்புக்கு 25, சோளம் 100, மக்காசோளம் 500, துவரை 150, உளுந்து 100, பாசிப்பயறு 100, தட்டைப்பயறு 150, நிலக்கடலை 500, சூரியகாந்தி 100, எள் 25, பருத்தி (வீரிய ஒட்டு) 200, பருத்தி(ரகம்) 350, சாம்பல் பூசணி 100, பாகற்காய் 250, சுரை 100, பீர்க்கங்காய் 150, புடலை 250, பரங்கி 100, கத்தரி 10, மிளகாய் 10, வெண்டை 100, தக்காளி 10, கீரை 50 கிராம்கள் போதுமானதாகும்.

இந்த மாதிரிகளுடன் பயிர், ரகம், குவியல் எண், தெளிவான அஞ்சல் முகவரி அடங்கிய துண்டுச் சீட்டு, முகப்புக் கடிதம், ஆய்வுக் கட்டணமாக மாதிரி ஒன்றுக்கு | 30 ரொக்கமாக காந்திகிராமம், திண்ணப்பாநகர், 2-வது குறுக்குத்தெரு (மே) விலுள்ள விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் நேரில் ஒப்படைக்க வேண்டும்.

மேலும், விவரம் தேவைப்படுவோர் 94434 64752 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

**பண்ணை ஆலோசனை மையம், சுய தொழில் தொடங்க விண்ணப்பிக்கலாம்**

First Published : 13 Sep 2010 01:36:11 PM IST

காரைக்கால், செப். 12: பண்ணை ஆலோசனை மையம் மற்றும் சுயதொழில் தொடங்க வேலையில்லா வேளாண் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதுகுறித்து காரைக்கால் வேளாண்துறை அலுவலகம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுவை வேளாண்துறை மூலமாக வேலை கிடைக்காத வேளாண் பட்டதாரிகள் பண்ணை ஆலோசனை மையம் மற்றும் சுயதொழில் தொடங்கிட | 3 லட்சத்துக்கும் மிகாமல் மானியம் அளிக்கப்படுகிறது. மேலும், வேளாண் அறிவியல் நிலையம் மூலமாக ஒரு ஆண்டு வேளாண் பயிற்சி பெற்ற வேலையில்லா நபர்கள் சுயதொழில் தொடங்க | 75 ஆயிரம் மானியம் தரப்படுகிறது.

இந்த திட்டத்தின் மூலம் பயனடைய விரும்புவோர் திட்டத்தின் வழிமுறைகள் மற்றும் விண்ணப்ப படிவத்தினை வேளாண் துறை இணையத ளமான ஜ்ஜ்ஜ.ல்ன்க்ன்ஹீட்ங்ழ்ழ்ஹஹஞ்ழ்ண்.ர்ழ்ஞ் என்ற முகவரியில் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். நிறைவு செய்யப்பட்ட செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கூடுதல் வேளாண் இயக்குநர், (பயிற்சி வழி திட்டம்) காரைக்கால் அலுவலகத்துக்கு வரும் 30 தேதிக்குள் அனுப்ப வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

**பள்ளிப்பாளையம் வேளாண் விரிவாக்க மையம் 28 மெட்ரிக் டன் விதைநெல் விற்று சாதனை**

First Published : 13 Sep 2010 12:35:49 PM IST

திருச்செங்கோடு, செப். 12: திருச்செங்கோடு வட்டம் பள்ளிப்பாளையம் வேளாண் விரிவாக்க மையம் 28 மெ. டன் நெல்விதை விற்று சாதனை படைத்துளளது.

இது குறித்து வேளாண் உதவி இயக்குர் பா. முரளீதரன் கூறியது:-

மேட்டூர் கிழக்கு கரை வாய்க்கால் பாசனம் மூலம் பள்ளிப்பாளையத்தில் 10 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படவுள்ளது.

தற்போது நெல் நாற்றங்கால் விடும் பணி தீவிரமடைந்துள்ளது. பள்ளிப்பாளையம் ஒன்றியத்திற்கு உட்பட்ட 11 வருவாய் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் இந்த ஆண்டில் சான்று பெற்ற நெல்விதைகளை வாங்கி நாற்று விடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுவரை எப்போதும் இல்லாத அளவிற்கு வேளாண் விரிவாக்க அலுவலகத்தில் மட்டும் 28 மெ.டன் சான்று பெற்ற விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 2 மெ.டன் விதைகள் இருப்பு உள்ளன. இது தவிர பள்ளிப்பாளையம் உழவர் பணி கூட்டுறவு சங்கம், அக்ரி கிளினிக் ஆகியவற்றில் 10 மெ.டன் நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

÷ சொந்த நெல் விதைகளைப் பயன்படுத்தினால் ரகத்தின் தன்மைகள் பாதிக்கப்படும். மகசூல் குறையும். சான்று பெற்ற நெல்விதைகளைப் பயன்படுத்துவதால் வீரியத்தன்மை கொண்டதாகவும், முளைப்புத் திறன் கொண்டதாகவும் அதிக மகசூல் திறன் கொண்டதாகவும் விதைகள் இருக்கின்றன.

÷ இதனால் அதிக விளைச்சல் கிடைத்து அதிக லாபமும் விவசாயிகள் பெறுகின்றனர். ஆகவே இதுவரை நெல் விதைகள் பெறாத விவசாயிகள் உடனடியாக பள்ளிப்பாளையம் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி விதைகள் பெற்று பயனடையலாம் என்றார்.

**தோட்டக்கலைத் துறை சார்பில் | 2.5 கோடியில் பணிகள்**

First Published : 13 Sep 2010 02:07:47 PM IST

பெரம்பலூர், செப். 12: பெரம்பலூர் மாவட்டத்தில், தோட்டக்கலைத் துறை சார்பில் | 2.5 கோடியில் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில், தோட்டக்கலைத் துறை சார்பில் 2010- 11 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த தோட்டக்கலைத் துறை அபிவிருத்தித் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய மூங்கில் சாகுபடி இயக்கம், நுண்ணீர் பாசனத் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், துல்லியப் பண்ணையத் திட்டம் உள்ளிட்ட திட்டங்களைச் செயல்படுத்த தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

அதனடிப்படையில், ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு 50 சத மானியத்தில் உயர் ரக, வீரிய ரக காய்கறி விதைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 0.5 ஹெக்டேர் பரப்பளவுக்கு மானியம் வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் மதிப்பீடு 1.20 லட்சம் ஆகும்.

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் பல்வேறு இனங்களில் சிறு, குறு, நடுத்தர விவசாயிகள் பயன்பெறும் வகையில், | 98 லட்சத்து 808 மதிப்பில் இத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

தேசிய மூங்கில் சாகுபடி இயக்கத்தின் கீழ், இரண்டு ஆண்டுகளுக்கு பராமரிப்பு மானியமாக | 4 ஆயிரம் வீதம், 23 ஹெக்டேருக்கு, | 92 ஆயிரம் அளிக்கப்படும். நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ், நிகழாண்டு 250 ஹெக்டேர் நிலம் பெறப்பட்டு, இத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும், நுண்ணீர் பாசனம் அமைக்க 65 சதம் மானியம் வழங்கப்படும்.

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், 100 ஹெக்டேர் பரப்பளவில் சிறிய வெங்காயத்தில் உயர் தொழில்நுட்பம் மூலமாக உற்பத்தி பெருக்க ஹெக்டேருக்கு | 7500 மானியம் வழங்க நிதி பெறப்பட்டுள்ளது.

துல்லியப் பண்ணையத் திட்டத்தின் கீழ், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், ஹெக்டேருக்கு | 63 ஆயிரத்து 640-ல் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க | 48 ஆயிரத்து 640-ம், நீரில் கரையும் உரம் பெற | 15 ஆயிரத்துக்கான மானியம் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு, பெரம்பலூர் தோட்டக்கலை துணை இயக்குநர், சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், தோட்டக்கலை அலுவலர்கள், வேளாண்மை உதவி அலுவலர்களைத் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்றார் அவர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 80.94 அடி**

First Published : 13 Sep 2010 02:01:56 PM IST

தஞ்சாவூர், செப். 12: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 80.94 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 5,512 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. கல்லணையில் இருந்து வினாடிக்கு 15,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது.

கல்லணையில் இருந்து வினாடிக்கு காவிரியில் 8,022 கன அடி, வெண்ணாற்றில் 859 கன அடி, கல்லணைக் கால்வாயில் 2,017 கன அடி, கொள்ளிடத்தில் 1,205 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

**தோட்டக் கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வழிமுறை**

First Published : 13 Sep 2010 12:33:46 PM IST

கோபி, செப். 12: ஆத்மா திட்டத்தின் கீழ் நம்பியூர் வட்டார தோட்டக் கலை துறை சார்பில் தோட்டக் கலை பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் நவீன உத்திகளை விவசாயிகள் அறிந்துக் கொள்ள செயல் விளக்கங்களை வேளாண் துறை அலுவலர்கள் செய்து வருகின்றனர்.

÷இதன்படி காராப்பாடி கிராமத்தில் 15 விவசாயிகளை கொண்டு தோட்டக் கலை வாழை தன்னார்வ குழுவும், எருமைக்காரன்பாளையத்தில் தோட்டக் கலை மஞ்சள் தன்னார்வ குழுவும் தோட்டக் கலை துறையால் துவங்கப்பட்டுள்ளது.

÷ துறை அலுவலர்கள் மேற்படி குழு உறுப்பினர்களுக்கு நவீன உத்திகளை கையாள்வது குறித்து ஒரு நாள் பயிற்சி அளித்தும், சுழல்நிதி வழங்கியும் இத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது.
÷மேலும், இக்குழுக்கள் வாரம் ஒரு முறை கூடி களப் பிரச்னைகளை விவாதம் செய்யவும், கூட்டங்கள் நடத்துவதற்கு ஏதுவாக தளவாட சாமன்களையும் துறை வழங்கியுள்ளது. தோட்டக்கலைப் பயிர்களின் நவீன உத்திகளை கடைபிடிக்க செய்யும் நோக்கத்தில் வாழை, மஞ்சள், பயிர்களுக்கு நீர் வழி உரமிடுதல், பயிர் பாதுகாப்பு பழக்கன்றுகள், நடவு பராமரிக்கும் முறைகள் குறித்து துறை அலுவலர்களால் கிராம அளவில் செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டது.

## 6.40 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்

First Published : 13 Sep 2010 12:30:50 PM IST

கோபி,செப். 12: கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் | 6.40 லட்சத்துக்கு வாழைத்தார் விற்பனையானது.
÷கோபி மொடச்சூர் ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் 6,500 வாழைத்தார்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன.
÷ஏலத்தில், கதலி கிலோ | 32.50, நேந்திரன் கிலோ | 29, செவ்வாழை தார் | 510, ரஸ்தாளி | 350, பச்சை நாடான் | 225, மொந்தன் | 250, ரோபாஸ்டா | 275, பூவன் | 275க்கு விற்பனை செய்யப்பட்டது. இவை மொத்தம் | 6.40 லட்சத்துக்கு விற்பனையானது.
÷தேங்காய் ஏல விற்பனை: சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்திற்கு 4500 தேங்காய் கொண்டு வரப்பட்டன. குறைந்த பட்ச விலையாக | 4.50க்கும் அதிக பட்ச விலையாக | 9.05க்கும் போனது. இதன் மதிப்பு | 18 ஆயிரம் ஆகும்.
÷இத்தகவலை விற்பனை சங்கத்தின் செயலாளர் சுதந்திரநாதன் தெரிவித்தார்.

தினமலர்

**செம்மை நெல் சாகுபடிக்கு விழிப்புணர்வு பிரச்சாரம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2010,02:25 IST

பள்ளிபாளையம்: பள்ளிபாளையம் வட்டாரத்தில் செம்மை நெல் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஜீப் மூலம் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.பள்ளிபாளையம் வட்டாரத்துக்குட்பட்ட கிராமங்களில், சம்பா நெல் சாகுபடி துவங்கி உள்ளது. மேட்டூர் கிழக்குக்கரை வாய்க்கால் பாசனப்பகுதிக்கு செப்டம்பர் 1ம் தேதி முதல் நீர்வரத்து துவங்கி உள்ளது. கடந்த ஆண்டை போல் நடப்பு ஆண்டிலும் வேளாண் துறை சார்பில் செம்மை நெல் சாகுபடி திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளிடையே செம்மை நெல் சாகுபடி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஜீப் மூலம் தொழில் நுட்பப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தலைமை வகித்தார். யூனியன் சேர்மன் பாலு துவக்கி வைத்தார். வெடியரம்பாளையத்தில் துவங்கிய ஜீப் பிரச்சாரம் தெற்குபாளையம்புதூர், எலந்தகுட்டை, தாண்டாங்காடு, இளையாம்பாளையம், சீராம்பாளையம், குள்ளநாயக்கன்பாளையம், ரங்கனூர், ஆவத்திபாளையம், குமாரபாளையம், அய்யம்பாளையம், விரப்பம்பாளையம், புதுப்பாளையம் அக்ரஹாரம், ஆலாம்பாளையம், தட்டான்குட்டை ஆகிய இடங்களில் நடந்தது.

நிகழ்ச்சியில், தட்டாங்குட்டை பஞ்சாயத்து தலைவர் காந்தி, தொலைபேசி குழு உறுப்பினர் நடனசபாபதி, துல்லிய பண்ணைய சங்க தலைவர் சண்முகசுப்ரமணியம், விவசவாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் குமார், மாயாஜோதி, உதவி விதை அலுவலர் அருள் ஆகியோர் செய்தனர்.

**விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2010,02:34 IST

தர்மபுரி: தர்மபுரியை அடுத்த பி.துரிஞ்சிப்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது.

தர்மபுரி மண்டல இணைபதிவாளர் மணிமாறன் தலைமை வகித்து, கலந்தாய்வு கூட்டத்தை துவக்கி வைத்தார். சங்க செயலாளர் பழனிசாமி வரவேறார். இணை பதிவாளர் அலுவலக துணை பதிவாளர் ஆனந்தி, சரக துணை பதிவாளர் ஜெயகோபால், மத்திய கூட்டுறவு வங்கி முதன்மை வருவாய் அலுவலர் சந்திரசேகரன், தனி அலவலர் கர்ணன், பாப்பிரெட்டிப்பட்டி கூட்டுறவு சார் பதிவாளர் கள அலுவலர் பெருமாள் ஆகியோர் பேசினர்.

மண்டல இணை பதிவாளர் மணிமாறன் பேசியதாவது: பயிர் தொழிலுக்கு கூலி ஆட்கள் கிடைப்பதில் உள்ள சிரமத்தை தவிர்க்க விவசாய பணிக்கு இயந்திரங்களை பயன்படுத்தலாம். விவசாய இயந்திரங்கள் குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு கிடைக்க சங்க மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். சங்க உறுப்பினர்களுக்கு 14 சதவீத பங்கு ஈவுத்தொகை வழங்கப்பட்டுள்ளது. சங்கம் சிறப்பாக செயல்பட்டால் மட்டுமே இவ்வாறு வழங்க முடியும். இதில், விவசாயிகளில் பங்கு பெரும் அளவில் உள்ளது. சொட்டு நீர் பாசனம் மூலம் கரும்பு உற்பத்தி செய்து பயன் அடையலாம். இவ்வாறு அவர் பேசினார்.

கலந்தாய்வில் பங்கேற் பல விவசாயிகள் பேசும்போது,""இப்பகுதியில் மழை அதிகம் இல்லாததால் களைகள் அதிகம் உள்ளது. களைகளை கலைய களைக்கொல்லி சங்கம் மூலம் வழங்கிட வேண்டும். பவர் ட்ரில்லர்கள், கடலை உறிக்கும் இயந்திரம், கடலை அடிக்கும் இயந்திரம், கடலை எடுக்கும் இயந்திரம், நாற்று  நாடும் இயந்திரம் ஆகியவை சங்கத்தின் மூலம் குறைந்த வாடகைக்கு விட வேண்டும்,'' என வேண்டுகோள் வைத்தனர்

**மாற்றுப்பயிர் செய்திட விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,01:48 IST

சிதம்பரம்:சம்பா சாகுபடியை மட்டுமே நம்பியிருக்கும் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் காவிரி கடைமடை பகுதி விவசாயிகள் மாற்றுப்பயிர் சாகுபடியை விரும்புகின்றனர்.கடலூர் மாவட்டம், காவிரி டெல்டா கடைமடையான சிதம்பரம், காட் டுமன்னார்கோவில் பகுதியில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் செய்யப்படுகிறது.காவிரியில் தண்ணீர் திறப்பதில் தாமதம், பருவ மழை பொய்ப்பது போன்ற காரணங்களால் பல ஆண்டுகளாகவே உரிய காலங்களில் பயிர் செய்ய முடியவில்லை.அப்படியே பயிர் செய் தாலும் மழை, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங் கள் அல்லது புதிய நோய் தாக்குதலால் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

முப்போகம் நெல் சாகுபடி தற்போது சம்பா போகம் மட்டுமே விளைந் தால் போதும் என்ற நிலையில் சில ஆண்டாக சம்பா சாகுபடியும் ஏமாற்றி விடுகிறது.நெல் சாகுபடியில் ஏற்படும் இழப்பை சரி செய்யும் வகையில் நெல் அறுவடை நேரத்தில் ஊடுபயிராக விதைக்கப்படும் உளுந்து பயிரும், மூன்று ஆண்டுகளாக கை கொடுக் கவில்லை.இப்படி சம்பா சாகுபடியும் நம்ப முடியாமல், உளுந்து பயிரும் பழிவாங்குவதால் சிதம்பரம், காட்டுமன் னார்கோவில் பகுதி விவசாயிகள் வேறு வழியின்றி மாற்றுப்பயிராக எள், சோளம், கேழ்வரகு, கம்பு உள்ளிட்ட மானாவாரி பயிர் செய்யத் துவங்கியுள்ளனர்.

குமராட்சிப் பகுதியில் மட்டும் இந்த ஆண்டு 140 எக்டர் எள் பயிரிடப்பட் டுள்ளது. தற்போது புவனகிரி பகுதி விவசாயிகளும் எள் பயிர் செய்வதில் ஆர் வம் காட்டி வருகின்றனர்.லேசான மழை பெய் தாலே மானாவாரி சாகுபடிக்கு ஏற்றது என்பதால் ஜூன் மாதம் லேசான மழை பெய்யும் என்பதை கணக்கில் கொண்டு எள், சோளம் உள்ளிட்ட பயிர் கள் செய்யப்படுகிறது. சிதம்பரம் கொள்ளிடக்கரையொட்டி வல்லம் படுகை, குமராட்சி பகுதியில் முதல் முயற்சியாக கடந்த ஆண்டு முதல் மக்காச்சோளம் பயிரிட்ட விவசாயிகளுக்கு நல்ல பலனை கொடுத்துள்ளது.ஜூன் மாதம் விதைக் கப்படும் மானாவாரி பயிர் மூன்று மாத (ஆகஸ்ட் மாதம்) இறுதியில் அறுவடை செய்து விடுவதால் அடுத்து சம்பா சாகுபடியை துவக்கி விடலாம். சம்பா அறுவடை சமயத்தில் உளுந்து பயிர் செய்துவிட முடியும்.

இதன் மூலம் முப்போக நெல் சாகுபடி செய்வது நின்றதால் ஏற்படும் இழப்பை மானாவாரி பயிர் செய்வதன் மூலம் ஈடு செய்திட முடியும் என் பதால், அதற்கான தொழில் நுட்பங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி ஊக்கப்படுத்த வேண்டும். மேலும் கோடை மழையை முன் கூட்டியே தகவல் தெரிவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர் பார்க்கின்றனர்.சிதம்பரத்தில் கடந்த மாதம் 12ம் தேதி வேளாண் இணை இயக்குனர் தலைமையில் நடந்த விவசாயிகள் பயிறுவகை உற்பத்தி கருத்தரங்கில் இது தொடர் பாக விவசாயிகள் கோரிக்கைவைத் துள்ளனர்.காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் சம்பா சாகுபடியை மட்டுமே நம்பி இருக்க வேண்டிய நிலையில், மாற்றுப்பயிர் திட் டங்களை அரசு கொண்டு வருவதோடு நவீன சாகுபடி முறைகள், தொழில் நுட்பங்கள், பூச்சிக்கொல்லிகள் கையாள்வது குறித்து ஆலோசனைகள் வழங்கி ஊக்கப்படுத்தினால் இருண்டு கிடக்கும் விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்ற முடியும்.மழையை முன்கூட்டியே அறிய...மானாவரி பயிறு வகைகள் பயிரிட மழை தேவை என்பதால் மழை பெய்வதைமுன்கூட்டியே அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மழையை பற்றிய தகவல் அளிக்கும் இயற்கை இடர்பாடு நிர்வாக முகமை பேங்காங் நாட்டில் உள்ளது. 17 நாடுகளில் மழை வருவது குறித்து விவரங்களை இந்த முகமை அளித்து வருகிறது.மழை பெய்யும் காலம், மழையின் அளவு போன்ற விவரங்களை ஒரு மாதத்திற்கு முன்பு

அந்த முகமை மூலம் அறிந்துகொள்ள முடியும் என்பதால் கடலூர் மாவட்டத்தில் மழை பெய்வதை முன்கூட்டியே அறிய, உழவர் மன்றத் தலைவர் ரவீந்திரன் உள்ளிட்ட விவசாய சங்க பிரதிநிதிகள் முயற்சியில் இறங்கியுள்ளார். அதற்கான உதவிகள், தொழில் நுட்பங்கள், ஆலோசனைகளை வழங்கி அரசு ஊக்கப்படுத்த வேண்டும்.

**விதை நேர்த்தி செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2010,01:41 IST

சிதம்பரம் : சிதம்பரம் அடுத்த நந்திமங்கலத்தில் வேளாண்துறை மாணவர்கள், விவசாயிகளுக்கு உப்புக்கரைசலில் விதை நேர்த்தி முறை குறித்து செயல் விளக்கம் அளித்தனர். தம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்துறை மாணவர்கள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் மூலம் நந்திமங்கலம் கிராமத்தில் தங்கி விவசாயிகளின் அனுபவங்களை சேகரித்து வருகின்றனர். அதில் ஒன்றான உப்புக்கரைசலில் விதை நேர்த்தி முறை குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக் கம் அளித்து தரமான விதைகளை பிரித்தெடுக்கும் முறை குறித்து விளக்கமளித்தனர். நிகழ்ச்சியில் அப்பகுதி விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**ஊரல் கிராமத்தில் விவசாய கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2010,01:13 IST

திண்டிவனம் : திண்டிவனம் அடுத்த ஊரல் கிராமத்தில் விவசாய கருத்தரங்கம் நடந்தது. மங்களா உர நிறுவனம் சார்பில் நடந்த கருத்தரங்க நிகழ்ச்சிக்கு ஊராட்சி தலைவர் ராஜாராம் தலைமை தாங்கினார். பாண்டியன் உர டிப்போ உரிமையாளர் பாண்டியன் வரவேற்றார். மங்களா உர நிறுவன மண்டல மேலாளர் லோகமூர்த்தி உட்பட பலர் பேசினர். முப்பது முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். மங்களா கோல்ட் உர மாதிரி, விவசாயி குப்பசாமிக்கு வழங்கப்பட்டது. கிராமத்தில் உள்ள மரங்களை பராமரிக்க 5,000 ரூபாய் மதிப்புள்ள உரங்கள் இலவசமாக வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை கள உதவியாளர் பாரத் செய்திருந்தார். விழுப்புரம் உர விற்பனை அதிகாரி ராஜ்குமார் நன்றி கூறினார்.

**பொதுவிநியோக திட்டத்தால் விலைவாசி குறைவு:உணவுத்துறை அமைச்சர் பெருமிதம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,03:05 IST

கிருஷ்ணகிரி: ""தமிழகத்தில் செயல்படுத்தப்படும் சிறப்பு பொது விநியோக திட்டத்தால் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது," என, தமிழக உணவுத்துறை அமைச்சர் வேலு தெரிவித்தார்.வேப்பனப்பள்ளி அடுத்த சென்னசந்திரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் கட்டப்பட்ட 14 வகுப்பறைகள் மற்றும் புதிய அறிவியல் ஆய்வக கட்டிடம் திறப்பு விழா நேற்று நடந்தது. கலெக்டர் அருண்ராய் தலைமை வகித்தார். எம்.பி., சுகவனம், எம்.எல்.ஏ., செங்குட்டுவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சண்முகம், டி.ஆர்.ஓ., பிரபாகர் வரவேற்றனர்.

உணவு துறை அமைச்சர் வேலு புதிய வகுப்பறை கட்டிடங்கள், அறிவியல் ஆய்வகம் ஆகியவற்றை திறந்து வைத்து 159 பயனாளிகளுக்கு 39 லட்ச ரூபாய் நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:மாணவ, மாணவிகளுக்கு தரமான கல்வியை வழங்குவதற்கு வகுப்பறை உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகள் இன்றிமையாதது. கடந்த ஆட்சியில் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் மரத்தடி நிழலில் அமர்ந்து பாடம் படிக்க வேண்டிய நிலையில் இருந்தனர். தி.மு.க., அரசு ஆட்சி பொறுப்பேற்றதும் அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் அடிப்படை தேவைகளை அறிந்து புதிய கட்டிடங்களை கட்டி வழங்கப்பட்டு வருகிறது.

கல்வி வளர்ச்சிக்காக தி.மு.க., அரசு பல திட்டங்களை தீட்டி வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் 346 புதிய ஆரம்ப பள்ளிகள் துவங்கப்பட்டுள்ளது. 2004 பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 200 நடுநிலைப்பள்ளிகள், 125 உயர்நிலைப்பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் ஆசிரியர் பற்றாகுறையை போக்க கடந்த நான்கு ஆண்டுகளில் 30 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது.

கடந்த அ.தி.மு.க.., ஆட்சியில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளின் வளர்ச்சிக்காக 547 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. தி.மு.க., ஆட்சியில் ஆதி திராவிடர் நலத்துறை பள்ளிகளின் வளர்ச்சிக்காக 3,825 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ப்ளஸ்-2 வகுப்பில் தேர்ச்சி பெற்ற கிராம புற மாணவ, மாணவிகள் நுழைவுத் தேர்வு என்ற நடைமுறையின் கீழ் மேல்படிப்பு படிக்க முடியாத நிலை இருந்தது. இதை அறிந்த தமிழக முதல்வர் அனைவருக்கும் சமமான கல்வி கிடைத்திட நுழைவு தேர்வு முறையை ரத்துசெய்தார்.

குடும்பத்தில் முதல் பட்டதாரி மாணவர்களுக்கு படிப்பு செலவை தமிழக அரசே ஏற்று நடத்துகிறது. இதன் மூலம் தமிழகத்தில் கல்வி புரட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தில்

செயல்படுத்தப்படும் சிறப்பு பொது விநியோக திட்டத்தின் மூலம் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் பேசினார்.பர்கூர் எம்.எல்.ஏ., நரசிம்மன், யூனியன் சேர்மேன் முருகன், மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் முனிராஜ், பி.டி.ஏ., தலைவர் சக்கரவர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். பள்ளி தலைமை ஆசிரியர் வளர்மதி நன்றிகூறினார்.

**தேயிலை ஏலத்தில் வரத்து குறைவு: தரத்துக்கு மட்டுமே விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2010,02:42 IST

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏலத்தில் மிக்குறைந்த அளவு வரத்து இருந்தும், கிராக்கி தென்படவில்லை; தரமான தூளுக்கு மட்டுமே விலை கூடியது.
குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 36க்கான ஏலம் நடத்தப்பட்டது. மொத்தம் 11.89 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது; இலை ரகம் 7.95 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 3.94 லட்சம் கிலோ அடங்கும். ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்தவரை பாகிஸ்தான், ரஷ்ய நாட்டு வர்த்தகர்கள் கணிசமான அளவு தேயிலை தூளை வாங்கினர்.
இதுநாள் வரை பெரியளவில் பங்களிப்பு வழங்காமல் இருந்த ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா உட்பட உள்நாட்டு வர்த்தகர்கள் ஏலத்தில் பங்கேற்றனர்; இருப்பினும், தரமான தூளுக்கு மட்டுமே கூடுதல் விலை கிடைத்தது.

அனைத்து ரக தூளின் விலையும் கிலோவுக்கு 2 ரூபாய் குறைந்தது; விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 10 சதவீதம் தேக்கமடைந்தது.
சி.டி.சி., ரகத்தில் ஹோம்டேல் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 135 ரூபாய் விலை கிடைத்தது; 780க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன; ஆர்தோடக்ஸ் ரகத்தில் சாம்ராஜ் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் 190 ரூபாய் விலை கிடைத்தது; 30க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன.

இலை ரக விற்பனையில் சாதாரண ரக தூளுக்கு 32 -38 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 80 - 122 ரூபாய், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரக தூளுக்கு 33-43 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 90 - 130 ரூபாய் விலை கிடைத்தது. விற்பனை எண் 37க்கான ஏலம் வரும் 16,17 தேதிகளில் நடத்தப்படவுள்ளது. மொத்தம் 12.86 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில், இலை ரகம் 8.87 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 3.91 லட்சம் கிலோ அடங்கும். இது கடந்த ஏலத்தை விட 97 ஆயிரம் கிலோ குறைவு.
இந்த வார ஏலத்தில் விற்பனைக்கு வந்த தேயிலை தூளின் வரத்து வெகுவாக குறைந்தது.

இந்தாண்டு இதுவரை நடத்தப்பட்ட 36 ஏலங்களில் இதுவே குறைந்தபட்ச வரத்து; வரத்து குறைந்தும் தேவை அதிகரிக்கவில்லை.  வர்த்தகத்தில் நிலையற்ற தன்மை நிலவிய போதும், விவசாயிகள் வழங்கிய பசுந்தேயிலைக்கு பல இடங்களில் கட்டுப்படியான விலை வழங்கப்பட்டது. கிலோ பசுந்தேயிலைக்கு 8 -10 ரூபாய் வரை விலை வழங்கப்பட்டது.

**தோட்டக்கலைத்துறை மூலம் தொழில்நுட்ப திட்டப்பணிகள் பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,03:07 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் விஜயகுமார் வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் 2010-2011ம் ஆண்டில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய மூங்கில் சாகுபடி இயக்கம், நுண்ணீர் பாசனத்திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டம், துல்லிய பண்ணையம் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதற்கு தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் உயர்ரக மற்றும் வீரிய ரக காய்கறி விதை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 0.5 ஹெக்டர் பரப்புக்கு மானியம் வழங்கப்படும். 98.808 லட்சம் ரூபாய்க்கு தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலமும், 92 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தேசிய மூங்கில் சாகுபடி இயக்கமும், நுண்ணீர் பாசனத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 65 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தில் 7,500 ரூபாயும், துல்லிய பண்ணையம் திட்டத்தின் கீழ் 89 லட்சம் ரூபாய்க்கும் மானியம் வழங்கப்படும். விபரங்களுக்கு துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) அந்தந்த பகுதி வட்டாரத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் வேளாண் உதவி அலுவலர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம். இவ்வாய்ப்பை பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் இத்திட்டங்களில் பங்குபெற்று பயன்பெறலாம்.

**மலர் சாகுபடிக்கு மானியம் பெற தோட்டக்கலைத்துறை அழைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,03:05 IST

புதுக்கோட்டை: "புதுக்கோட்டை மாவட்டத்தில் மலர் செடிகள் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு மானியத் தொகை வழங்க தோட்டக்கலைத்துறை தயாராக உள்ளது' என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியன் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: புதுக்கோட்டை மாவட்டத்தில் ரோஜா, சம்பங்கி, மல்லிகை, வாடாமல்லி போன்ற மலர் செடி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதற்கு தேவையான மண்புழு உரம், ரசாயன உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. மலர் செடி சாகுபடியை மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கையை தோட்டக்கலைத்துறை துவக்கியுள்ளது. மலர் செடி சாகுபடி செய்ய முன்வரும் விவசாயிகளுக்கு இதற்கான முழு தொகையும் மானியமாக வழங்க தோட்டக்கலைத்துறை தயாராக உள்ளது. எனவே, மலர் செடி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மற்றும் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் தங்களுடைய நிலத்துக்கான கம்ப்யூட்டர் சிட்டா, அடங்கல் மற்றும் ரேஷன் கார்டு நகல், இரண்டு ஃபோட்டோ ஆகியவற்றுடன் புதுக்கோட்டை ஆயுதப்படை மைதானம் அருகிலுள்ள தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தை நேரில் தொடர்புகொள்ளலாம்.

**உயிர் உரங்கள் உற்பத்தி செய்யும் மையம் செயல்படுவதில் தாமதம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,23:42 IST

கம்பம்:உத்தமபாளையத்தில் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யும் மையம் தொடங் கப்பட்டு பல மாதங்கள் ஆகியும் உற்பத்தியை துவக்காத நிலையில் பூட்டி வைக்கப்பட்டுள்ளது. பாஸ்போபாக்டீரியா, அசோஸ்ஸ்பைரில்லம், ரைகோபியம், நீலப்பச்சை பாசி, அசோலா உள்ளிட்ட பல உயிர் உரங்கள் உள் ளது. ஒவ்வாரு உயிர் உரமும் ஒவ்வொரு வகையில் பயிர்களுக்கு நன்மை செய்கிறது. உயிர் உரங்கள் உற்பத்தி மையம் விவசாயத்துறை சார்பில் தமிழ் நாட்டில் குடுமியான் மலை, ராமநாதபுரம் உள் ளிட்ட சில இடங்களில் மட்டுமே செயல் பட்டு வருகிறது.

தேனி மாவட்டத்தில் உத்தமபாளையத்தில் உயிர் உரங்கள் தயாரிக்கும் மை யம் அமைக்க அரசு கடந்த ஆண்டு உத்தரவிட்டது. உதவி இயக்குனர் அலுவலகம் செயல்பட்டு வந்த கட்டடத்தில் இந்த மையம் அமைக்க முடிவு செய்யப் பட்டது. இதற் கென கட்டடமும் ஒதுக்கப்பட்டது. எட்டு மாதங்களை கடந் தும், இன்று வரை உயிர் உரம் உற்பத்தி துவங்கவில்லை. உத்தமபாளையம் உதவி இயக்குனர் முத்துலட்சுமி கூறியதாவது; உயிர் உரங் கள் உற்பத்தி செய்யும் மை யம் 90

லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது. மையத்திற்கு அலுவலர்கள் பணி நியமனம் செய்யப்படாததால் தான் தாமதமாகிறது. தற்போது கருவிகள் பொருத்தும் பணிகள் நடந்து வருகிறது என்றார்.

**இயற்கை உரம் பயன்படுத்துவதில் விவசாயிகள் ஆர்வம்:உரத்தட்டுப்பாடு, விலை உயர்வு எதிரொலி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,23:52 IST

வத்திராயிருப்பு:செயற்கை உரங்களையே பயன்படுத்தி வந்த விவசாயிகளிடையே சமீப காலமாக இயற்கை உரங்களை பயன்படுத்துவதில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. உரத்தட்டுப்பாடு, அவற்றின் விலை உயர்வும் விவசாயிகளின் இந்த ஆர்வத் திற்கு முக்கிய காரணியாக உள்ளது.மாவட்டத்தில் வத்திராயிருப்பு, ஸ்ரீவி., ராஜபாளையம், தளவாய்புரம், சேத்தூர் போன்ற பகுதிகளில் நெல், பருத்தி, எள், கரும்பு, போன்ற நன்செய் பயிர்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன.

விவசாயத்திற்கு செயற்கை உரங்களையே காலங்காலமாக விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். இதனால் மண்ணின் தன்மை மாறியதுடன் நிலத்தடி நீரின் தன்மையும் பன்மடங்கு மாறிவிட்டது.இதை தவிர்க்க இயற்கை உரமிடுமாறு விவசாயத்துறையினர், பொதுநல அமைப்புகள் விவசாயிகளை வலியுறுத்தி வந்த போதிலும் விவசாயிகளிடம் மாற்றம் ஏற்படவில்லை.

கடந்த 10 ஆண்டுகளாக அதிகரித்து வந்த உரங்களின் விலை உயர்வு, உரத்தட்டுப்பாடு ஆகியவற்றால் அடியுரமாக இயற்கை உரங்களை பயன்படுத்துவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர்.இதற்காக சணம்பூ, சக்கப்பூடு, கொழுஞ்சிக் குலைகள் ஆகியவற்றை நடவு செய்கின்றனர். அவை நன்கு வளர்ந்து பூ, பூத்தவுடன் அவற்றை அப்படியே நிலங்களில் போட்டு உழுதுவிடுவதால் பயிர்களுக்கு அதிகளவு பச்சயச்சத்து கிடைப்பதுடன், மண்ணின் தன்மையையும் படிப்படியாக மாற்றிவிடுகிறது. மேலும், விற்பற்காகவும் இப்பயிர்களை பயிரிடுகின்றனர்.

**மழை குறைவால் விளைச்சல் வீழ்ச்சி:சாத்தூரில் வெள்ளரி விலை கிடுகிடு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 13,2010,23:54 IST

சாத்தூர்:சாத்தூர் சுற்றுப்பகுதிகளில் விளைச் சல் குறைந்த நிலையில் வெள்ளரிக்காய் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.சில மாதங்களுக்கு முன் 100 காய்கள் 20 ரூபாய்க்கு விற்கப்பட்டன. இவை தக்கலை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கோவை உள்ளிட்ட பல ஊர்களுக்கு அனுப்பப்பட்டு வந்தன. மூன்றாண்டுகளாக மழை சரியாக பெய்யாததால் விளைச்சல் குறைந்து,100 காய்கள் 100

ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வெளியூர் வியாபாரிகள் வாங்க விரும்பாததால் விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில் சம்பா பருவ நாற்று விற்பனை**

செப்டம்பர் 13,2010,00:00 IST

காரைக்கால்:காரைக்காலில் சம்பா பருவத் தில் ஆடுதுறை-38, ஆடுதுறை - 46 ரகங்களை பயிரிட வசதியாக வேளாண் அறிவியல் நிலையம் நாற்று தயாரித்து விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:காரைக்கால் மாவட்ட விவசாயிகள் சம்பா பருவத்தில் நெல் பயிர் செய்ய ஏற்ற வகையில் இந்த ஆண்டு காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் சம்பா பட்டத்திற்கு ஏற்ற ஆடுதுறை - 38 மற்றும் ஆடுதுறை - 46 நெல் நாற்றுக்கள் தயாரித்து விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக விவசாயிகள் முன்பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள் ளப்படுகிறார்கள்.

விவசாயியின் பெயர், முகவரி, நாற்றங்கால் தேவை, தொலைபேசி விவரங்களுடன் வேளாண் அறிவியல் நிலையத்தை அணுக வேண்டும். முன் பணமாக நாற்றங்கால் விலையில் பாதி வசூலிக்கப்படும். ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு150 ரூபாய் விலை நிர்ணயிக்கப்பட் டுள்ளது.இதில் பாதி தொகையை 75 ரூபாய் (ஒரு சென்ட்டுக்கு) செலுத்த வேண்டும். நாற்றுக்கள் பறித்து செல்லும் சமயம் மீதி தொகையை செலுத்த வேண்டும். மேலும் வேளாண் துறை, உழவர் உதவியகங்கள் மூலமாகவும் தொடர்பு கொள் ளலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினத் தந்தி

**_சன்ற ஆகஸ்டு மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி 53 சதவீதம் வீழ்ச்சி_**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நாட்டின் வெங்காயம் ஏற்றுமதி சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 53 சதவீதம் சரிவடைந்து 1.86 லட்சம் டன்னிலிருந்து 87,428 டன்னாக குறைந்துள்ளது. மதிப்பின் அடிப்படையிலும் இது 58 சதவீதம் குறைந்து ரூ.221.17 கோடியிலிருந்து ரூ.93.39 கோடியாக சரிவடைந்துள்ளது.

பாகிஸ்தான்

இதற்கு, பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளைக் காட்டிலும் இந்தியா ஏற்றுமதி செய்யும் வெங்காயம் விலை மிகவும் அதிகமாக இருப்பதே காரணமாகும் என்று நாட்டின் வெங்காயம் ஏற்றுமதியை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் 'நாஃபெட்' அமைப்பின் மூத்த அதிகாரி தெரிவித்தார்.

உள்நாட்டில் வெங்காயம் விலையை உயராமல் தடுக்கும் வகையில், ஆகஸ்டு மாதத்திற்கான குறைந்த பட்ச ஏற்றுமதி விலையை 'நாஃபெட்' 220 டாலராக (ஒரு டன்) நிர்ணயம் செய்தது. இந்த விலைக்கு குறைவாக இந்திய நிறுவனங்கள் வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய முடியாது. அதே சமயம் பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் வெங்காயத்தை சுமார் 170–180 டாலர் (ஒரு டன்) என்ற விலையில் ஏற்றுமதி செய்கின்றன. இது, இந்திய நிறுவனங்கள் ஏற்றுமதி செய்யும் வெங்காயத்தின் விலையைக் காட்டிலும் சுமார் 50 டாலர் குறைவாகும். இதனால் தான் இந்தியாவின் வெங்காயம் ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து ஐந்து மாதங்களாக வெங்காயம் ஏற்றுமதி குறைந்து வருகிறது.

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இதன் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 43 சதவீதம் சரிவடைந்து 9.80 லட்சம் டன்னிலிருந்து 6.86 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.

விலை

சென்ற சில வாரங்களில் ஏற்றுமதி தரம் வாய்ந்த வெங்காயம் விலை டன்னிற்கு ரூ.250 அதிகரித்து ரூ.10,500–ஆக உயர்ந்துள்ளது. இதனையடுத்து செப்டம்பர் மாதத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை 220 டாலரிலிருந்து 275 டாலராக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே நடப்பு மாதத்திலும் வெங்காயம் ஏற்றுமதியில் சரிவு ஏற்படும் என தொழில் வல்லுனர் ஒருவர் தெரிவித்தார்.

**விலையும் இல்லை... தொழிலாளர்கள் பற்றாக்குறை:**

# புதர்கள் மண்டி கிடக்கும் சிறு தேயிலை தோட்டங்கள்

கூடலூர், செப்.14–

போதிய விலையும் இல்லை, தொழிலாளர்களும் பற்றாக் குறை, தொடர்ந்து நஷ்டத்தை சந்தித்து வருதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் கூடலூர் பகுதியில் சிறு தேயிலை தோட்டங்கள் எந்தவித பராமரிப்பின்றி விடப்பட்டதால் புதர்கள் மண்டி காணப்படுகின்றன.

## இந்திய தேயிலைக்கு வரவேற்பு குறைந்தது

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயிகள் சந்தித்து வருகிற முக்கிய பிரச்சினையாக கருதப் படுவது தேயிலைக்கு போதிய விலை கிடைக்க வேண்டும். 1995–ம் ஆண்டு வரை நீலகிரி தேயிலைக்கு சர்வதேச சந்தையில் நல்ல விலை கிடைத்தது. இதனால் தேயிலை விவசாயிகளுக் கும் நல்ல விலை கிடைத்தது. ஆனால் நாளடை வில் உலக வர்த்தக கொள்கையில் இந்தியா ஈடுபட்டதாலும், சிறிய நாடுகள் கூட குறைந்த விலைக்கு தேயிலை ஏற்றுமதி செய்ய முன் வந்ததால் இந்திய தேயிலைக்கு வரவேற்பு குறைந்தது.

இதனால் உலக வர்த்தக அளவில் இந்திய பச்சை தேயிலைக்கு விலை கிடைக்காமல் போனது. இந்த நிலை இன்று வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. போதிய விலை கிடைக் காத பிரச்சினை, விலை கிடைக் காததால் தேயிலை விவசாயத்தில் குறிப்பிட்ட லாபம் இல்லாததால் தொழிலாளர்களுக்கு குறைந் தளவு சம்பளம் என இதர காரணங்களினால் தேயிலை விவசாயம் நலிவடைந்து வருகிறது.

## தொழிலாளர்கள் பற்றாக்குறை

இதனால் தோட்ட தொழிலாளர்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர். கடந்த கால கட்டங் களில் நீலகிரியில் மட்டும் சுமார் 60 ஆயிரத் துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இடம் பெயர்ந்து பிற தொழில்களில் ஈடுபட்டு வருவதாக புள்ளியியல் விவரங்கள் தெரிவிக் கின்றன.

இதனால் தொழிலாளர்கள் பற்றாக்குறை, தேயிலை தோட்டங்களில் போதிய வருமானம் இல்லாததால் இருக்கின்ற தொழிலாளர்களுக் கும் குறைந்த சம்பளம் வழங்கப்படுகின்றன. மேலும் பராமரிப்பு செலவுகள் கட்டுப்படி யாகாத நிலையில் உள்ளதால் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தங்களது தோட் டங்களை பராமரிப்பின்றி அப்படியே விட்டுவிட்டனர்.

## புதர்கள் மண்டி கிடக்கும் தேயிலை தோட்டங்கள்

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் எதிர் பார்த்த அளவுக்கு இல்லாத தால் பெருமளவு சிறு தேயிலை தோட்டங்கள் புதர்கள் மண்டி காணப்படுகின்றன. கூடலூர் பகுதியில் கொப்புள நோய் தாக்குதல் அதிகரித்து வருவதால் பச்சை தேயிலையும் குறைந்து காணப்படுகின்றன. இதனால் பச்சை தேயிலை பறிக்காமல் பெரும்பாலான தோட் டங்கள் காணப்படுகின்றன.

பெரிய தேயிலை தோட்ட நிறுவனங்கள் தள்ளாட்டம் போடுகின்ற நிலையில் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தேயிலை தோட்டத்தை எதிர்பார்க்காமல் வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இதனால் கூடலூர் பகுதியில் பெரும்பாலான தேயிலை தோட்டங்கள் புதர்கள் மண்டி கிடக்கின்றன.

இந்த விஷயத்தில் மத்திய, மாநில அரசுகள் உடனடியாக முடிவு எடுத்து தேயிலை விவசாயம் நலிவடையாமல் இருக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என தேயிலை விவசாயிகள் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.



கூடலூரில் தேயிலைக்கு போதிய விலை கிடைக்காததால் பராமரிப்பின்றி விடப்பட்டுள்ள தேயிலை தோட்டங்கள் புதர்கள் மண்டி கிடக்கும் காட்சியை படத்தில் காணலாம்.

# நாற்றுக்களுக்கு பாதுகாப்பு



மஞ்சூர் பகுதியில் தேயிலை தோட்டங்களுக்கு நிழல் தரும் வகையில் சில்வர்ஓக் பதியன் நாற்றுக்கள் நடவு செய்யப் பட்டுள்ளன. அவற்றை கால்நடைகளிடம் இருந்து பாதுகாக்க தற்போது பிளாஸ்டிக் பைகளை கொண்டு சுற்றி கட்டி விவசாயிகள் பாதுகாத்து வருகிறார்கள்.